## இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

************

**<u>ஊடக அறிக்கை</u>**

<u>இலங்கையின் பாதுகாப்பு செயலர்**, கடற்படை** தளபதி மற்றும் **இராணுவ தளபதி ஆகியோருடன்** இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் **சந்திப்பு**</u>

இலங்கைக்கு வருகைதரும் இராஜதந்திரிகளுக்காக அரசாங்கத்தால் வரையறை செய்யப்பட்டிருக்கும் சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடித்ததன் பின்னர் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் (இந்திய கடற்படை) விகாஸ் சூத் அவர்கள் இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஆயுத படைகளின் தலைமை அதிகாரிகளுடன் கடந்த வாரம் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

2. 2020 ஜூலை 28 ஆம் திகதி பாதுகாப்பு செயலர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரட்ண அவர்களை மரியாதையின் நிமித்தம் சந்தித்திருந்த கப்டன் சூத் அவர்கள் அதன் தொடர்ச்சியாக பாதுகாப்பு படைகளின் பதில் பிரதானியும் இலங்கை இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களை ஜூலை 27 ஆம் திகதியும், இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உளுகேதன்னே அவர்களை ஜூலை 29 ஆம் திகதியும் மரியாதையின் நிமித்தம் சந்தித்திருந்தார்.

3. இந்த சந்திப்பின்போது இருநாடுகளினதும், இரு தரப்பு ஆயுத படைகளினதும் பாரம்பரிய நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்த அதேசமயம் பரஸ்பர நலன்கள் அடிப்படையிலான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டது . இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ரீதியிலான உறவினை மேலும்

வலுப்படுத்துவதற்கு தேவையான வலுவான ஈடுபாடு தொடர்பாக இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்த இருதரப்பு உயர் அதிகாரிகளும் வலியுறுத்தி கூறியிருந்தனர்.

4. பயிற்சிகள் ஏனைய வலுவான தொடர்புகள் உள்ளிட்ட ஆளுமை விருத்தி செயற்பாடுகள் ஊடான வலுவான ஒத்துழைப்பின் மீது காணப்படும் வலுவானதும் வளர்ந்துவருவதுமான பாதுகாப்பு ரீதியிலான உறவினை இலங்கையும் இந்தியாவும் அனுபவித்து வருகின்றன. இந்திய அரசினால் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் இராணுவ பயிற்சி வாய்ப்புக்களில் 50 வீதத்துக்கும் அதிகமான சந்தர்ப்பங்கள் இலங்கை பாதுகாப்பு தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு தொடர்பில் பொதுவான கவலைகள் மற்றும் சவால்கள் குறித்து அவதானிக்கப்படும் நிலையில் பிராந்தியத்தில் பாதுகாப்பினையும் சமாதானத்தையும் உறுதிப்படுத்துவதற்கு பரஸ்பரம் உறுதியாக செயற்பட வேண்டிய தேவை காணப்படுவதுடன் இவை இருதரப்பு பாதுகாப்பு உறவுகளுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது. கிரமமாக நடைபெறும் உயர்மட்ட பரிமாற்றங்கள் மற்றும் விஜயங்களும், கூட்டுப் பயிற்சிகள், கப்பல்களின் விஜயங்கள், விளையாட்டு ரீதியிலான தொடர்புகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களும் இந்த வலுவான ஒத்துழைப்பினை மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளன.

5. covid-19 காரணமாக பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையிலும் இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு உயர்மட்ட விஜயங்கள் சந்திப்புக்கள் நடைபெற்றிருந்தது. இவை தொடர்பில் திருப்திகரமான நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு உயர்மட்ட விஜயங்களுக்கு சமாந்தரமாக 2020 பெப்ரவரியில் இந்தியாவில் நடைபெற்ற பாதுகாப்பு துறை குறித்த கண்காட்சி ஒன்றில் பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல். கமல் குணரத்ன மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

6. இலங்கையில் சிக்கியிருந்த இந்தியா பிரஜைகளை மீண்டும் சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக 2020 ஜூன் மாதம் இந்திய கடற்படை கப்பல் ஜலஸ்வா இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இலங்கை கடற்படை மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை ஆகிய தரப்பினரால் வழங்கப்பட்டிருந்த அபரிதமான ஒத்துழைப்புக்காக இந்தியா

தனது நன்றியினை தெரிவித்துள்ளது. இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் ஆயுத படைகளுக்கு இடையில் காணப்படும் நெருக்கமான உறவுக்கு சான்று பகரும் ஓர் அம்சமாக இந்த செயற்பாடுகள் அமைகின்றன.

7. Covid-19 சவால்களை எதிர்கொள்வதற்காக இரு நாடுகளினதும் தலைமைத்துவங்கள் வழங்கிய அர்ப்பணிப்புக்கு சமமாக அண்மைய மாதங்களில் இந்தியா அவசியமான மருத்துவ உதவிகளை வழங்கியிருந்தது . இலங்கை கடற்படைக்கு கொவிட் நோயாளர்களை கொண்டு செல்வதற்கான 2 போக்குவரத்து தொகுதிகளும் 4 வெப்ப ஸ்கானர் கருவிகளும் இந்திய கடற்படையால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் பங்களாதேஷ் , தாய்லாந்து, மியன்மார் உள்ளிட்ட பல்வேறு பங்காளி நாடுகளுக்காகாக இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த இணையக் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் பிரதானி மேஜர் ஜெனரல் எச்.ஜே.எஸ்.குணவர்தன அவர்கள் இலங்கை அரசாங்கம் கொவிட் 19 நோயினை எதிர்கொண்ட முறைகள் தொடர்பாக அனுபவங்களை பகிர்ந்துகொண்டிருந்த நிலையில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

8. இரு நாடுகள் மற்றும் இரு நாட்டு படைகளுக்கும் இடையிலான தொழில் ரீதியிலானதும் கலாசார ரீதியிலானதுமான ஆழமான நட்புறவுக்கு மேலும் வலுவூட்டும் அம்சமாக கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தின நிகழ்வுகள் இலங்கை இராணுவ தலைமையகத்தில் நடைபெற்ற நிலையில் முப்படைகளையும் சேர்ந்த 400 க்கும் அதிகமான அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தமையை குறிப்பிடலாம்.

*****

கொழும்பு

சகவருடம் 1942 சிராவண 10

01 ஆகஸ்ட் 2020